**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 384/2024**

**Prosecution witness : அ.சா.6** **Date : 07.02.2026.**

| | |
|---|---|
| **Name : நடராஜன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1.3 present. ) (Accused 2 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் இந்திரா நகரில் குடியிருந்து வெல்டிங் வேலை செய்கிறேன். கடந்த 2021 ம் வருடம் மாலை நேரத்தில் நான் வீட்டிற்கு வெளியே இருந்தபோது சத்தம் கேட்டது. சென்று பார்த்தபோது பன்னீர்செல்வம் என்பவரை யாரோ அடித்ததாக சொன்னார்கள்,வேறு ஒன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை—**

2. கடந்த 31.03.2021 ம் தேதி மாலை 06.00 மணிக்கு நான் வீட்டிற்கு வெளேியே சென்று பார்த்தபோது ஆறுமுகம் வீட்டுச்சுவர் ஓரம் உளி வைத்து அடித்த சத்தம் கேட்டதால் குழந்தை அழுதது என ஆறுமுகத்திடம் கூறப்பட்டது என்றால் அவ்வாறு இல்லை. ஆறுமுகம் கெட்டவார்த்தையால் பேசினார் என்றால் இல்லை. சேட்டு, தங்கமணி இருவரும் பன்னீர்செல்வத்தை கையால் அடித்தார்கள் என்றால் இல்லை. ஆறுமுகம் கீழே கிடந்த கொராடவை எடுத்து

பன்னீர்செல்வத்தின் முதுககில் அடித்தார் என்றால் இல்லை. சேட்டு கீழே கிடந்த சுத்தியை எடுத்து இடதுப்பக்க தோள்பட்டையில் அடித்தார் என்றால் இல்லை.

3. பிரியா தடுக்க சென்றபோது தங்கமணி கையால் அடித்தார் என்றால் இல்லை.

பிறகு கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிச்சென்றனர் என்றால் இல்லை.

சம்பவத்தை நேரில் பார்த்து விட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**